இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 18.03.2026

# ஆர்ப்பாட்டம் நடத்த அருகதை இருக்கிறதா?

சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது, பாலியல் குற்றங்கள் பெருகிவிட்டன என்று சொல்லி கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துகிறார் எடப்பாடி பழனிசாமி. அதற்கான அருகதை அவருக்கு இருக்கிறதா?

**ஜெயலலிதாவின் பங்களாவில் கொலையும், கொள்ளையும் நடந்தது யார் ஆட்சியில்? பெண் போலீஸ் ஐ.ஜி.க்கே பாதுகாப்பு இல்லாத வகையில் ஆட்சி நடத்தியது யார்? கஞ்சா கடத்தல் அதிகமாக நடந்தது யார் ஆட்சியில்? மாமூல் பட்டியலில் அ.தி.மு.க. ஆட்சி காலத்து அமைச்சர்களும் அதிகாரி களும் இருந்ததாக சி.பி.ஐ. வழக்குத் தாக்கல் செய்து விசாரணை நடை பெற்று வருவதை பழனிசாமி மறுக்கிறாரா? தலைமைச் செயலகத்தில் ரெய்டு நடந்தது பழனிசாமி ஆட்சியில்தானே?**

**‘பொள்ளாச்சி பாலியல் வழக்கு’ பழனிசாமி** என்று சொல்லத்தக்க வகையில் அவமானம் நடந்தது அவரது ஆட்சியில்தானே? இதுபற்றி பத்திரிகையாளர்கள் அன்றைய முதலமைச்சர் பழனிசாமியைக் கேட்டார்கள். “அப்படியெதுவும் இல்லை, ஆதாரம் இருந்தால் கொடுங்கள்” என்ற மகா யோக்கியர்தான் இந்த பழனிசாமி. சி.பி.ஐ.க்கு வழக்கு ஒப்படைக்கப் படும் வரை குற்றவாளிகளைக் காப்பாற்ற அ.தி.மு.க. அரசு முயற்சித்தது.

**‘தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு வழக்கு’ பழனிசாமி** என்று அவரைச் சொல்லலாமே? தூத்துக்குடியில் 13 உயிர்களை துள்ளத் துடிக்க சுட்டுக் கொல்ல உத்தரவிட்டவர்தான் இந்த பழனிசாமி. சுட உத்தரவிட்டு விட்டு, ‘டி.வி.யைப் பார்த்து தான் தெரிந்து கொண்டேன்’ என்றவர்தான் இந்த பழனிசாமி.

**‘சாத்தான்குளம் லாக்கப் மரண வழக்கு’ பழனிசாமி** என்றே இவரைச் சொல்லலாம். சாத்தான்குளம் காவல் நிலையத்தில் ஜெயராஜ், பெலிக்ஸ் என்ற அப்பாவும் மகனும் அடித்தே கொல்லப்பட்டார்கள். ‘அவர்கள் உடல் நலமில்லாமல் இறந்தார்கள்’ என்று சொன்னவர்தான் இந்த பழனிசாமி. இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரித்து வருகிறது.

**அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவங்களை மறக்க முடியுமா?** 2019ஆம் ஆண்டு நடந்த 11 துப்பாக்கிச் சூடு சம்பவங்களில் மூன்று குற்றவாளிகள் உயிரிழந்ததோடு, 12 காவல்துறையினர், இரண்டு பொதுமக்கள் மற்றும் ஒரு குற்றவாளி என 15 பேர் காயமடைந்துள்ளனர்.

2020ஆம் ஆண்டு நடந்த ஐந்து துப்பாக்கிச் சூடு சம்பவங்களில் ஒரு குற்றவாளி உயிரிழந்ததோடு, இரண்டு காவல் துறையினர், ஒரு குற்ற வாளி என மூன்று பேர் காயமடைந்துள்ளனர். 2021ஆம் ஆண்டு நடந்த ஆறு துப்பாக்கிச் சூடு சம்பவங்களில் ஐந்து குற்றவாளிகள் உயிரிழந்த தோடு, ஆறு காவல் துறையினர், இரண்டு குற்றவாளிகள் என எட்டு பேர் காயமடைந்துள்ளனர்.

பழனிசாமி ஆட்சி காலத்தில் கடந்த 2018, 2019 மற்றும் 2020ஆம் ஆண்டு காலத்தில் சிறார்களுக்கு எதிராக 6 ஆயிரத்து 944 பாலியல் வன்கொடுமை வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாக நாடாளுமன்றத் தில் ஒன்றிய அரசு தெரிவித்தது. மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்வி களுக்கு உள்துறை இணை அமைச்சர் அஜய்குமார் மிஸ்ரா எழுத்துப் பூர்வமாக அளித்த பதிலில், கடந்த 2018 ஆம் ஆண்டில் ஆயிரத்து 881 வழக்குகளும், 2019ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 216 வழக்குகளும், 2020ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 847 சிறார்களுக்கு எதிரான பாலியல் வழக்குகளும் பதிவு செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

**பழனிசாமி ஆட்சியின் கடைசி ஆறுமாதத்தில் எவ்வளவோ குற்றச் சம்பவங்கள் தமிழ்நாட்டில் நடந்தன. அதனை நினைவூட்டிப் பார்ப்போமா?**

கடலூர் அருகே உள்ள கீழ் அருங்குணம் ஊராட்சி மன்றத் தலைவர் சுபாஷ் வெட்டிக் கொல்லப்பட்டார். கோவையில் உள்ள நான்கு கோவில் களின் முன்பு டயர்களை எரித்து கலவரத்துக்கு அடித்தளம் அமைக்கப் பட்டது. திருப்பத்தூர் அருகே ஏலகிரிமலை காவல்துறையினர் மிரட்டிய தால் கோவிந்தராஜனும் அவரது மனைவி மீனாவும் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டார்கள். சென்னை கோடம்பாக்கத்தைச் சேர்ந்த திருநங்கை சபீனா, தனது மொபட் வாகனத்தில் சென்றார். அவரிடம் இருந்து மொபட் வாகனத்தை காவலர்கள் பறிமுதல் செய்தார் கள். வீட்டுக்குச் சென்ற சபீனா, தற்கொலை செய்து கொண்டார்.

சிவகங்கை மாவட்டம் காளையார்கோயில் அருகில் உள்ள முடுக்கூரணி என்னும் ஊரில் இராணுவ வீரர் ஒருவரின் தாய் ராஜகுமாரி, மனைவி சினேகா ஆகியோர் கொலை செய்யப்பட்டு அவர்களின் 7 வயதுக் குழந் தையின் கழுத்தில் கிடந்த நகை மற்றும் காலில் கிடந்த கொலுசுகள் கொள்ளை அடிக்கப்பட்டது. புதுக்கோட்டை மாவட்டம் ஏம்பல் பகுதியில் 7 வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய் யப்பட்டாள். தூத்துக்குடி கல்வினை கிராமம் பகுதியில் 7 வயது சிறுமி படுகொலை செய்யப்பட்டாள்.

சமுதாயப் பிரச்சினைகளைத் தட்டிக்கேட்ட சென்னை அருகில் உள்ள திருநின்றவூர் செல்வராஜ் நகரில் மகேந்திரன் கொலை செய்யப்பட்டார். சட்டவிரோதமாக மணல் அள்ளுவதைத் தடுத்த ஊராட்சி மன்றத் தலைவர் பரமகுரு வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார்.

புதுக்கோட்டை மாவட்டம் ஏம்பல் மேட்டு குடியிருப்பு பகுதியை சேர்ந்த சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டாள். இந்த வழக்கில் ராஜா என்பவர் கைது செய்யப்பட்டார். மேலும் இரண்டு பேர் இதில் சம்பந்தப்பட்டு உள்ளார்கள், அவர்களையும் கைது செய்ய வேண்டும் என்று கூறி வந்த நிலையில் ராஜாவை மட்டும் கைது செய்து சிறையில் அடைத்தனர். அதன்பிறகு ராஜாவை உடல் பரிசோதனைக்கு புதுக்கோட்டை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்குக் கொண்டு வந்த நிலையில் அவர் தப்பி ஓடி விட்டார். சுமார் 16 மணி நேரம் தேடி ராஜாவை மீண்டும் கைது செய்து அவர் மீது ஒரு வழக்குப் பதிவு செய்து அவரை சிறையில் அடைத்துள்ளனர். இந்த வழக்கில் காவலுக்கு வந்த இரண்டு காவலர்கள் முருகையன், கோகுல குமார் இருவரும் பணி நீக்கம் செய்யப்பட்டனர்.

இதுதான் பழனிசாமியின் ஆட்சியாகும். **குற்றச்சம் பவங்களைத் தடுக்க முதுகெலும்பு இல்லாமல் டி.வி. பார்த்து மிக்சர் சாப்பிட்டுக் கொண்டு இருந்த பழனிசாமி தான், இப்போது கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்திக் கொண்டு இருக்கிறார்.** ●●

## என்னைப்பற்றி த.வெ.க. உண்மைக்கு மாறான கருத்தைத் தெரிவிப்பதா?

# காலம் பேசாது; காத்திருந்து பதில் சொல்லும்!

## சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அறிக்கை!

**சென்னை, மார்ச் 18-**

**“என்னைப்பற்றி த.வெ.க. உண்மைக்கு மாறான ஒரு கருத்தைத் தெரிவித்துள்ளது. இதற்குக் காலம் பேசாது; ஆனால் காத்திருந்து பதில் சொல்லும்” என்று சூப்பர் ஸ்டார் ரஜினி காந்த் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.**



இதுகுறித்து சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

“த.வெ.க. கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருக்கும் ஆதவ் அர்ஜுனா சமீபத்தில் என்னைப் பற்றி உண்மைக்கு மாறான ஒரு கருத் தைத் தெரிவித்திருந்தார்.

அவருடைய அவதூறுக் கருத் தைக் கண்டித்து, எனக்கு ஆதர வாகக் குரல் கொடுத்த தமிழக சட்ட மன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந் திரன், மத்திய அமைச்சர் எல்.முரு கன், தமிழக அமைச்சர் ரகுபதி, தொல்.திருமாவளவன், எஸ்.பி. வேலுமணி, அண்ணாமலை, அர் ஜுனமூர்த்தி, அன்புமணி ராம தாஸ், ஜி.கே. வாசன், ஜான் பாண் டியன், புகழேந்தி மற்றும் பல கட்சி அரசியல் தலைவர்கள், அமீர், ஜி.தனஞ்சயன் மற்றும் திரையுலக நண்பர்கள், மற்றும் நக்கீரன் கோபால், சாணக்கியா ரங்கராஜ் பாண்டே மற்றும் ஊடகத்துறையி னர், என்னை வாழவைக்கும் தெய் வங்களான ரசிகப் பெருமக்கள் அனைவருக்கும் என்னுடைய மன மார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

“காலம் பேசாது; ஆனால் காத்தி ருந்து பதில் சொல்லும்” வாழ்க தமிழ்நாடு! வளர்க தமிழக மக்கள்!! ஜெய்ஹிந்த்!!!”

இவ்வாறு சூப்பர் ஸ்டார் ரஜினி காந்த் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# மறைந்த தலைவர்களின் திருவுருவச் சிலைகளை மறைக்க வேண்டாம்!

## அரசியல் கட்சிகளின் கோரிக்கையை ஏற்று – தேர்தல் ஆணையம் உத்தரவு!

**சென்னை, மார்ச் 18-**

**தமிழ்நாட்டில் ஏப்ரல் 23ஆம் தேதி சட்ட மன்றத் தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப் பட்டுள்ள நிலையில், நடத்தை விதிகள் உடனே அமலுக்கு வந்துள்ளன. தேர்தல் நடத்தை விதிகளின்படி, தலைவர்களின் புகைப்படங்கள் அகற்றப்பட்டும், சிலைகள் மூடப்பட்டும் வருகின்றன.**

இந்நிலையில், மறைந்த தலைவர்களின் சிலைகளை மறைக்க அரசியல் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

தேர்தல் ஆணையத்தால் நடத்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் தலைமை தேர்தல் அதிகாரியிடம் அரசியல் கட்சி தலைவர்கள் இதனை வலியுறுத்தி, மறைந்த தலைவர்களின் சிலைகளை மறைக்கக் கூடாது என்று கோரிக்கை விடுத் தனர்.

குறிப்பாக இக்கூட்டத்தில் தி.மு.க. சார்பில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கலந்து கொண்டு வலியுறுத்தினார்.

அதன் பின் செய்தியாளர்களிடம் ஆர். எஸ்.பாரதி கூறுகையில், தேர்தல் நேரங் களில் தலைவர்களின் சிலைகளை துணிகளால் மூடக்கூடாது. குறிப்பாக, வரும் ஏப்ரல் 14ந்தேதி அம்பேத்காின் பிறந்த நாள் வருவதால், அவரின் சிலை மற்றும் எம்.ஜி.ஆர். போன்ற மறைந்த தலைவர் களின் சிலைகளை மூடக்கூடாது என்று கூறினோம்.

இதுதொடர்பாக உரிய உத்தரவு பிறப்பிப் பதாக தேர்தல் கமிஷன் உறுதி அளித் துள்ளது. என்று கூறினார்.

இந்நிலையில் நேற்று தேர்தல் ஆணை யம், மறைந்த தலைவர்களின் திருவுருவச் சிலைகளை மறைக்க வேண்டாம் என்று அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

# வெளிநாட்டு மருத்துவப் பட்டதாரிகளுக்கான CRMI இன்டர்ன்ஷிப் இடங்கள் குறைக்கப்பட்டதா?

## மக்களவையில் – தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. கேள்வி

புதுடெல்லி,மார்ச்.18-

தென் சென்னை மக்க ளவை தொகுதி உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகத்திடம் வெளி நாட்டில் மருத்துவம் படித்த பட்டதாரிகளுக்கான கட் டாய சுழற்சி மருத்துவ பயிற்சி (CRMI) இடங்கள் குறித்து சில கேள்விகளை முன்வைத்தார்.

அதாவது, கடந்த ஒரு ஆண்டில் வெளிநாட்டு மருத் துவ பட்டதாரிகள் (Foreign Medical Graduates - FMGs) மேற்கொள்ள வேண்டிய கட் டாய சுழற்சி மருத்துவ இன் டர்ன்ஷிப் (CRMI) இடங்கள்



தேசிய மருத்துவ ஆணையத் தால் பெருமளவில் குறைக் கப்பட்டுள்ள தா?

அப்படியானால் அதன் விவரங்கள் என்ன? மேலும், CRMI இன்டர்ன்ஷிப் இடங் களை பெறுவதில் வெளி நாட்டு மருத்துவ பட்டதாரி கள் எதிர்கொள்ளும் சிக்கல்களை தீர்க்க மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக் கைகள் என்ன? ஆகிய கேள் விகளை எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய சுகாதா ரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்தின் இணை அமைச்சர் அனுப் ரியா படேல் எழுத்துப்பூர்வ மாக பதில் அளித்தார். அந்த பதிலில்:

தேசிய மருத்துவ ஆணை யம் வழங்கிய தகவலின்படி, வெளிநாட்டு மருத்துவ பட் டதாரிகள் CRMI இன்டர்ன் ஷிப் மேற்கொள்ளும் இருக் கைகளின் எண்ணிக்கை குறைக்கப்படவில்லை.

அந்த மாணவர்களுக் கான இன்டர்ன்ஷிப் நடைமு றைகள் Foreign Medical Graduate Licentiate (FMGL) Regulations, 2021 மற்றும் கட்டாய சுழற்சி மருத்துவ இன்டர்ன்ஷிப் ஒழுங்குமுறை2021 ஆகிய விதிகளின் கீழ் நிர்ணயிக்கப்பட்டு ள்ளன. இந்த விதிமுறைகள் இந்திய மருத்துவ பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் பயிற்சிக்கு ஒப்பான மருத்துவ பயிற் சியை FMG மாணவர்கள் பெறுவதை உறுதி செய்யும் நோக்கத்துடன் உருவாக்கப் பட்டுள்ளன.

CRMI விதிமுறைகளின் படி, FMG மாணவர்கள் தேர் வில் தேர்ச்சி பெற்ற பிறகு இன்டர்ன்ஷிப் மேற்கொள்ள கீழ்க்கண்ட ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ளன:

1. புதிதாக தொடங்கப் பட்ட மருத்துவக் கல்லூரிக ளில் முதன்மையாக பணிய மர்த்தலாம்.

2. தகுதி மற்றும் மதிப் பெண் அடிப்படையில் கவுன் சலிங் அல்லது இருக்கை ஒதுக் கீட்டு முறையின் மூலம் பல்வேறு மருத்துவக் கல்லூரி கள் அல்லது நிறுவனங்களுக்கு அனுப்பப்படலாம்.

3. பழைய மருத்துவக் கல் லூரிகளில் CRMI மேற் கொள்ள அனுமதிக்கப்பட்ட இருக்கைகளில் 7.5% வரை FMG மாணவர்களுக்கு ஒதுக்க லாம்.

4. புதிய மருத்துவக் கல் லூரிகளில் தங்களது மாண வர்கள் CRMI மேற்கொள் ளாத நிலையில் 100% இருக்கைகள் FMG மாணவர் களுக்கு வழங்கப்படலாம்.

இவ்வாறு பதில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# கபிலர் மலையில் ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## கே.எஸ்.மூர்த்தி – கூட்டணிக் கட்சியினர் பங்கேற்பு!

நாமக்கல், மார்ச் 18–

நாமக்கல் மேற்கு மாவட்டம் பர மத்திவேலூர் தாலுக்கா பரமத்தி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மற் றும் கபிலர்மலை ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு தி.மு.க மற்றும் கூட்டணி கட்சிகள் சார்பில் எல்.பி.ஜி சிலிண்டர் தட்டுப்பாடு மற்றும் ஒன்றிய அரசின் நிதி புறக்கணிப்பை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற் றது.

கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க பொறுப்பாளரும், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினருமான கே.எஸ். மூர்த்தி கலந்து கொண்டு ஒன்றிய அரசைக் கண்டித்தும் அதற்கு துணை போகும் கூட்டணிக் கட்சி களைக் கண்டித்தும் கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தினார்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஒன் றிய செயலாளர்கள் தன்ராஜ், லலித் குமார் சாமிநாதன், தளபதி சுப்பிர மணி, சரவணகுமார், நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க.வினர் விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் மகிழ் பிரபா கரன், மேற்கு மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் கண்ணன், மேற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சுந்தர், நவலடி, வேலூர் பேரூர் கழகச் செய லாளர் முருகன், பரமத்தி பேரூராட்சி தலைவர் மணி, துணை தலைவர் ரமேஷ்பாபு, நாமக்கல் மேற்கு மாவட்ட பொறியாளர் அணித் தலை வர் அருண், பொறியாளர் அணி துணை அமைப்பாளர் ஜெகதீஷ் உட்பட மாவட்டம், நகர, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொது மக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் நேற்று மாவட்ட அவைத் தலைவர் எஸ். குணசேகரன் தலைமையில் சைதை பஜார் சாலையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனை வழங்கினார். இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க. தனசேகரன், மு.மகேஷ்குமார், பாலவாக்கம் க.சோமு, பா.அருணாச்சலம், மாநில வர்த்தகர் அணி செயலாளர் காசிமுத்துமாணிக்கம், உள்ளிட்ட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.